# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 480/2010
## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 4/PW-4 |
| Name | : திரு. கலைவாணன் |
| Father/Husband's Name | : சீமான் |
| Village | : நெ.3/23, மண்ணுடையம்மன் கோயில் தெரு |
| Taluk | : மடிப்பாக்கம், சென்னை 600091 |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர் செய்யப்பட்டார். எதிரிக்கு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. எதிரியிடம் வழக்கறிஞர் உள்ளாரா என்று கேட்டு எழுத்து பூர்வமாக பெறப்பட்டது. எதிரி தனக்கு வழக்கறிஞர் உள்ளதாகவும், தன்னிடம் காவல் அதிகாரிகள் பொருட்கள் மற்றும் ரொக்கங்களை பெற்று கொண்டு பொய் வழக்குகள் தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கை குறித்து ஆவணங்கள் வழங்கினால் வழக்கறிஞர் மூலமாக வழக்கை நடத்தி முடிக்க ஒத்துழைப்பு தருவதாக கூறினார். இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கின் இலவச நகல்கள் ஏற்கனவே எதிரிக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது சாட்சி ஆஜரில் உள்ளதால் இன்று முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை–**

நான் தற்போது மடிப்பாக்கம் சென்னையில் வசித்து ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். சாட்சியிடம் இவ்வழக்கின் பார்வை மகசர் ஆவணம் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதிலுள்ள 1 வது கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். **அந்த கையொப்பம் அதசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மடிப்பாக்கம் கூட்ரோடு அருகிலுள்ள ஆக்சிஸ் வங்கியிடம் எனது ஆட்டோவை நிறுத்தி வைத்திருந்தேன். அப்போது தீனதயாளன் எஸ்ஜ என்பவர் அந்த இடத்தில் படம் வரைந்து கொண்டிருந்தார். படம் வரைந்ததற்கு சாடசியாக என்னிடம் கையொப்பம் போட சொன்னார்கள் அதனால் போட்டேன். வழக்கை பற்றிய விவரங்கள் என்னிடம் கூறவில்லை. சாட்சியாக மட்டும் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

என்னுடன் இரமேஷ் என்பவரும் கையொப்பம் செய்தார். அந்த கையொப்பத்தை 21.03.2009 அன்று மாலை 03.45 மணியளவில் செய்தேன். மடிப்பாக்கம் கூட்ரோடில் உள்ள UTI பேங்கிடம் உள்ள சிவசக்தி கடையிடம் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். போலிசார் கடைக்கு யாராவது வந்து செல்கிறார்களா என்று கேட்டார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

**எதிரியே சாட்சியை குறுக்கு விசாரணை செய்கிறார்.**

தீனதயாளன் என்ன காரணத்திற்காக படம் வரைந்தார் என்று கேட்டால் காரணம் எனக்கு தெரியாது. படம் வரையும் போது நான் அந்த இடத்தில் இருந்தேனா என்றால் இல்லை. இரண்டு கடையும் மூடியிருந்தது. அந்த இரண்டு கடையின் பெயரும் சிவசக்தியா என்று கேட்டால் ஆம். தீனதயாளன்எந்த நிலை அதிகாரி என்றால் எஸ்.ஐ. தீனதயாளன் எந்த காவல் நிலையத்தில் பணிபுரிந்தார் என்று கேட்டால் மடிப்பாக்கம் காவல் நிலையத்தில். தீனதயாளன் 2009 ல் மடிப்பாக்கத்தில் பணியில் இருந்தார் என்றால் சரிதான். UTI வங்கியின் எதிரில் ஆட்டோ ஸ்டேண்டு கிடையாது என்று சொன்னால் ஆட்டோ ஸ்டேண்டு கிடையாது ஆனால் அந்த இடத்தில் எல்லா பஸ் ஸ்டாப்பில் ஏற்றுவது போல் ஆட்டோவில் சவாரி ஏற்றி செல்வோம். அந்த பகுதியில் உள்ள ரோடு குறுகலான ரோடு ஒரே பேருந்து மட்டும் தான் செல்ல முடியும் என்றால் ஆட்டோவை நிறுத்துவதற்கு அங்கு தாராளமாக இடம் உள்ளது. எத்தனை அடி ரோடு என்று கேட்டால் அடி தெரியாது ஆனால் இரண்டு பேருந்துகள் செல்லலாம்.

பொய்யாக தீனதயாளன் கேட்டு கொண்டதன் பேரில் நான் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் அவ்வாறு எதுவும் இல்லை வரைபடத்தில் கையொப்பம் செய்ததற்கு சாட்சி சொல்ல சொன்னார்கள்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.